# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2012/2 - 2017 මාර්තු මස 27 වැනි සඳුදා - 2017.03.27

*2012/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம்**

2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சேர் பெறுமதி சட்டத்தினால் (திருத்தம்) கடைசியாக திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (14) ஆம் உட்பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க ஆகிய நான், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, பதிவு செய்யப்படாத ஆட்களினால் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள் மீதும் மற்றும் பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்பாகக்கூடிய ஆரம்ப இருப்புக்களின் மீதும் கருதப்பட்ட உள்ளீட்டு வரி வரவினைக் கோரும் நோக்கத்திற்காக, 2016 மே 02 ஆந் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் மீதான பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்து கொண்ட ஆட்களினால் பேணப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளினைக் குறித்துரைத்து இந்த அறிவித்தலினை விடுக்கின்றேன்.

கல்யாணி தஹநாயக்க,<br>
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

கொழும்பு 02,<br>
2017, மாச்சு 23.

அட்டவணை

1. **புதிதாகப் பதிவு செய்து கொண்ட ஆட்களுக்கான இருப்புக்களின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரி**

(i) மொத்த விற்பனையாளர் அல்லது சில்லறை விற்பனையாளராக பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்து கொள்ளுகின்ற எவரேனும் ஆள் அல்லது பங்குடமைக்கு 2016.05.02 ஆந் திகதியிலிருந்து 2016.12.31 வரையிலான காலப்பகுதியில் அத்தகைய பதிவானது பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின், கீழே விதித்துரைக்கப்பட்டவாறான நிபந்தனைகளுக்குட்பட்டு, பதிவு செய்த திகதியிலுள்ளவாறு பொறுப்பாகக்கூடிய பொருட்களின் இருப்புக்களின் மீது கருதப்பட்ட உள்ளீட்டு வரியினைக் கோருவதற்கு அனுமதியளிக்கப் படுகின்றது ;

(ii) பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்பாகக்கூடிய இருப்பின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு பெறுமதி சேர் வரியானது, உண்மையான கொடுக்கல் வாங்கல் அல்லது நிறையிடப்பட்ட சராசரி நாட்களின் அடிப்படையிலும், 11/111 அல்லது 15/ 115 எனும் பொருத்தமான வரிப் பின்னத்தில் கீழே தரப்பட்ட வடிவத்தின்படியான ஒவ்வொரு காலப்பகுதிக்கும் ஏற்புடைய வகையில் கணிப்பிடப்படுதல் வேண்டும்.

| காலப் பகுதி | ஏற்புடைய பெ .சே. வ. பின்னம் (F) | நாட்களின் எண்ணிக்கை | குறித்த காலப்பகுதிக்குரிய பெ. சே. வ. ஏற்புடைய இருப்பு – கணிப்பீடு: இருப்பு பெறுமதிகளின் வேறுபாடு X நாளொன்றுக் குரிய எடை | குறித்த காலப்பகுதிக்குரிய பெ. சே. வ. ஏற்புடைய இருப்பு – பெ. சே. வ. ஏற்புடைய இருப்பின் பெறுமதி (S) | பெ. சே. வ. ஏற்புடைய இருப்புக்களின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரி (V) = Fx S |
|---|---|---|---|---|---|
| 31.03.2016 | 11/111 | - | - | B | xxxxx |
| 01.04.2016 - 01.05.2016 | 11/ 111 | 31 | (A – B) x 31/Y | P | xxxxx |
| 02.05.2016 - 11.07.2016 | 15/115 | 71 | (A – B) x 71/Y | Q | xxxxx |
| 12.07.2016 - 31.10.2016 | 11/111 | 112 | (A – B) x 112/Y | R | xxxxx |
| 01.11.2016 - பதிவு செய்த திகதி | 15/ 115 | X | (A – B) x X/Y | S | xxxxx |
| **மொத்தம்** | | Y | | A | xxxxx |

- A - பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்து கொண்ட திகதியிலுள்ளவாறான பெறுமதிசேர் வரிக்குப் பொறுப்புடைய இருப்பு
- B - 2016.03.31 ஆந் திகதியிலுள்ளவாறான ஐந்தொகையின்படியான பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய இருப்பு
- 2016.03.31 ஆந் திகதியிலுள்ளவாறான ஐந்தொகை திகதிக்கும் பதிவு செய்யப்பட்ட திகதிக்கும் இடையிலான பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய இருப்பு வேறுபாடு (A-B) = P + Q + R + S ஆகும்.
- பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய இருப்பு வேறுபாடுகள் நிறையிடப்பட்ட சராசரி நாட்கள் மற்றும் ஒவ்வாரு காலப்பகுதிக்கும் ஏற்புடையதான வரிப் பின்னம் ஆகிய இரண்டின் அடிப்படையிலான காலப்பகுதிக்கு மேல் வழங்கப்படுகின்றது.
- பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய இருப்பு வேறுபாடுகள் நிறையிடப்பட்ட சராசரி நாட்கள் மற்றும் ஒவ்வாரு காலப்பகுதிக்கும் ஏற்புடையதான வரிப் பின்னம் ஆகிய இரண்டின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

(iii) பெறுமதிசேர் வரிக்குப்பொறுப்பாகக்கூடிய இருப்புக்கள் மீதான பெறுமதிசேர் வரிக்குப் பொறுப்பாகக்கூடிய இருப்புக்கள், பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்பாகாத இருப்புக்கள் மற்றும் கருதப்பட்ட உள்ளீட்டு வரி என்பன தொடர்பான பதிவேடுகள் பதிவு செய்தல் திகதியிலுள்ள ஆரம்ப இருப்புக்கான அட்டவணையிலுள்ளவாறு அட்டவணையில் பேணப்படுதல் வேண்டும்.(இணைப்பு II) (பதிவு செய்யப்பட்ட திகதியிலுள்ளவாறான ஆரம்ப இருப்புக்கான அட்டவணை). பதிவு செய்யப்பட்ட திகதியானது 2016.05.02 இற்கும் 2016.11.01 இற்குமிடையில் காணப்படுமாயின், ஆரம்ப இருப்பானது 2016.11.01 ஆந் திகதியிலுள்ளவாறானதாக இருப்பின் பெறுமதியில் காணப்படுதல் வேண்டும். இது தொடர்பில், கீழே விபரிக்கப்பட்டவாறு இருப்பினைக் கணிப்பீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| | |
|---|---|
| பதிவுத் திகதியிலுள்ளவாறான இருப்பு | XXXX |
| கூட்டு<br>பதிவுத் திகதியின் பின்னர் பெசேவ பதிவு செய்யாத ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய கொள்வனவுகள் | XXXXX |
| *கழி* | |
| *2016.11.01* வரையிலான திகதிவரையில் மேற்படி இருப்புக்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் | XXXX |

*(பொருத்தமான வரி வீதமானது பந்தி 1 இன் விடயம் (ii) இல் தரப்பட்ட அட்டவணையின்படி பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.)*

**(iv) இந்த அட்டவணையானது முதல் தடவை கோரிக்கை விடுக்கப்படுகின்ற பெறுமதிசேர் வரிக்குப் பொறுப்பாகக்கூடிய பெறுமதி சேர் வரி மீது கருதப்படும் உள்ளீட்டுப் பெறுமதி சேர் வரிக்காக ஒரு தடவை மட்டும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இ - சேவையின் அட்டவணை / ஆவண சமர்ப்பித்தல் பயனர் இடைமுகத்தினைப் (UI) பயன்படுத்தி அட்டவணையினைப் பதிவேற்றுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட ஆளாக உள் நுழையுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.**

*2.* **பதிவு செய்யப்படாத ஆட்களிடமிருந்தான கொள்வனவுகளின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரி**

(i) *மொத்த விற்பனையாளர் அல்லது சில்லறை வழங்குனராக பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்துள்ள எவரேனும் ஆட்கள் அல்லது பங்குடமையாளர்களுக்கு, 2016 மே 02 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர், கீழே குறித்துரைக்கப்பட்டவாறான நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகையில் பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்பாகக்கூடிய பொருட்களின் கொள்வனவு மீது கருதப்பட்ட உள்ளீட்டு வரியினைக் கோருவதற்கு அனுமதியளிக்கப்படுகின்றது ;*

(ii) *அத்தகைய ஆள் அல்லது பங்குடமையானது அத்தகைய வழங்குனர்களிடமிருந்து பின்வரும் ஆவணங்களைச் சேகரிக்குமாறு கோரப்படுவதுடன் தேவையான போது அவற்றினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயாராக வைத்திருத்தலும் வேண்டும்.*

*(அ) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி ;*
*(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி (உரிமையாளர் அல்லது முன்னுரிமைப் பங்காளர்) ;*
*(இ) வர்த்தகசார் விலை விபரப்பட்டியல்.*

(iii) *கருதப்பட்ட உள்ளீட்டு வரியானது அத்தகைய பொறுப்பாகக்கூடியபொருட்களின் கொள்வனவுச் செலவு மீதான வழங்கலின் போது நடைமுறையிலுள்ள ஏற்புடைய பெறுமதி சேர் வரி வீதத்தின்வரிப் பின்னத்தினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.*

(iv) *அட்டவணை 05 ஆ (இணைப்பு III) (பதிவு செய்யப்படாத ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரிக்கான அட்டவணை) இல் குறிப்பிடப்பட்டவாறான கருதப்பட்ட உள்ளீட்டு வரி மற்றும் ஏனைய உரிய தகவல்கள் தொடர்பான பதிவேடுகள் மாதாந்த அடிப்படையில் பேணப்படுதல் வேண்டும்.ஆணையாளர் நாயகத்திற்கு பெ. சே. வ. விபரத்திரட்டினைச் சமர்ப்பிக்குகையில், அட்டவணை 05 (இணைப்பு III) இலுள்ள அதே தகவலின் அடிப்படையில் தயாரிக்கப்படும் அட்டவணை 05 (இணைப்பு I) (பதிவு செய்யப்படாத ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரிக்கான அட்டவணை) இனை மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றது*

*3.* **கருதப்பட்ட உள்ளீட்டு வரியினைக் கோருதல்**

*பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய ஆரம்ப இருப்புடன் தொடர்புடைய கருதப்பட்ட உள்ளீட்டு வரவு, மற்றும் முதலாவது அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான கொள்வனவுச் செலவு மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரவு பின்வரும் மட்டுப்படுத்தல்களுக்குட்பட்டு கோரிக்கை விடுக்கப்பட முடியும்.*

*(அ) 2016 மே 02 ஆம் திகதியின் பின்னர் பெசேவ பதிவினைப் பெற்றுக் கொண்டுள்ள ஆட்களுக்கு கிடைக்கக்கூடிய மேற்படி கருதப்பட்ட உள்ளீட்டு வரவானது, அத்தகைய ஆட்களினால் கூடு ஆ இன் கீழான மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்தின் வழங்கல் பெறுமதி தொடர்பான அவரின் வெளியீட்டு வரியினைப் பதிவுசெய்யுமாறு கேட் கப்படுமிடத்து, குறித்த வரியானது பெ. சே. வ. விபரத்திரட்டின்கூடு 2 இனுள் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.*

(ஆ) அத்தகைய ஆட்கள் கூடு ஆ இல் (புதிதாக சேர்க்கப்பட்ட) வெளிப்படுத்தப்பட்ட வழங்கல்களுடன் தொடர்புடைய வரி விபரப்பட்டியல்கள் மற்றும் வரி விபரப்பட்டியல்கள் உள்ளடங்கலாக (வெளியீட்டு அட்டவணை ) மேற்படி வழங்கல்கள் தொடர்பில் அட்டவணை 1 இனைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் ;

(இ) அட்டவணை 05 இல் குறிப்பிடப்பட்ட பெசேவ பதிவு செய்துள்ள ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள பொறுப்பாகக்கூடிய பொருட்கள் மற்றும் பொறுப்பாகாத பொருட்களின் பெறுமதியானது கூடு ஜே4 இல் பதிவு செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) கோரக்கூடிய தொகையானது பெசேவ விபரத்திரட்டின் கூடு ஆர்3 இல் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெறுமதியானது பின்வரும் முறையில் பெறப்படுதல் வேண்டும்.

**(I) ஆரம்ப இருப்பு மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரவு**

(i) முதல் தடவை கோரப்படுகின்ற கருதப்பட்ட உள்ளீட்டு பெசேவ விபரத்திரட்டின் கூடு ஆர்3அ இல் பதிவு செய்யப்பட வேண்டிய அட்டவணை 05 அ இலுள்ள கணிப்பீடு செய்யப்பட்டு பதிவு செய்தல் திகதியில் விற்பனை செய்யப்படாதுள்ள பெறுமதிசேர் வரி அறவிடத்தக்கதான அலகுகளின் கொள்வனவுப் பெறுமதி மீதான கருதப்பட்ட உள்ளீட்டு பெசேவ.2016.05.02 இற்கும் 2016.11.01 இற்குமிடையில் பதிவு செய்யப்பட்ட திகதி வருமாயின், ஆரம்ப இருப்பானது மேலே பந்தி 1 இன் விடயம் (iii) இல் விபரிக்கப்பட்டவாறு 2016.11.01 ஆந் திகதியிலுள்ளவாறு இருத்தல் வேண்டும் ;

(ii) வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில், கீழே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள மட்டுப்படுத்தலுக்குட்பட்டு கோரத்தக்க கருதப்பட்ட உள்ளீட்டு வரவானது கூடு R3B இனுள் பதிவு செய்யப்படுதல் வேண்டும் ;

(iii) வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் கோரிக்க விடுக்கப்பட முடியாத ஆரம்ப இருப்பு மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரவு ஆயின், அது கருதப்பட்ட உள்ளீட்டு வரவாக முன் கொண்டு செல்லப்படும் வகையில் கூடு R3C இனுள் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் இப்பெறுமதியானது உடனடுத்து வரும் வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் ஆரம்ப மீதியாக இருப்பதுடன் அது உடனடுத்து வரும் வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் பெ. சே. வ. விபரத்திரட்டின் கூடு சு3யு இனுள் பதிவு செய்யப்படுதல் வேண்டும் ;

(iv) ஆரம்ப இருப்பில் உள்ள விடயங்கள் தொடர்பில் பெசேவ சட்டத்தின் ஏற்பாட்டின்படி அனுமதிக்கப்பட வேண்டிய உள்ளீட்டுப் பெ. சே. வ. ஆனது ஆரம்ப இருப்பு மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரவினைக் கோருகின்ற போது கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது.

**(II) பெ. சே. வ. பதிவு செய்து கொள்ளாத ஆட்களிடமிருந்து வரிவிதிக்கத்தக்க காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரவு**

(i) பெறுமதி சேர் விபரத்திரட்டின் R3E கூட்டினுள் பதிவு செய்யப்பட வேண்டிய அட்டவணை 05 இல் கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி அறவிடத்தக்க, பெறுமதி சேர் வரி பதிவு செய்த ஆட்களிடமிருந்து வரிவிதிக்கத்தக்க காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுப் பெறுமதி மீதான கருதப்பட்ட உள்ளீட்டுப் பெறுமதி சேர் வரி. கீழே விடயம் (v) இல் குறிப்பிடப்பட்டவாறான ஏதேனும் அனுமதிக்கத்தக்க உள்ளீட்டுப் பெசேவரியாக இருக்குமிடத்து, R3E இலுள்ள பெறுமதியானது கருதப்பட்ட உள்ளீட்டுப் பெறுதி சேர் வரவின் தேறிய பெறுமதியாக இருக்கும்.

(ii) பதிவு செய்யப்பட்ட திகதியானது 2016.05.02 ஆம் திகதிக்கும் 2016.11.01 ஆந் இற்குமிடையில் காணப்படுமாயின், பெ. சே. வ. பதிவு செய்யாத ஆட்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்பாகும் கொள்வனவுகள் பதிவு செய்த திகதியிலுள்ளவாறான ஆரம்ப இருப்புடன் சேர்க்கப்படுதல் வேண்டும். அத்துடன் மேலே பந்தி 1 இன் விடயம் (iii) இல் விபரிக்கப்பட்டவாறான அத்தகைய இருப்புக்களிலிருந்து அதன் பின்னர் விற்பனை செய்யப்பட்ட விடயங்களின் பெறுமதியினைக் கழித்தலும் வேண்டும்.

(iii) வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில்,கூடு R3F இல் பதிவு செய்யப்பட வேண்டிய கீழே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்ட மட்டுப்படுத்தலுக்குட்பட்டு கோரத்தக்க கருதப்பட்ட உள்ளீட்டு வரவு.

(iv) வரிவிதிக்கத்தக்க காலப்பகுதியில் கோரப்படமுடியாத வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் கிடைக்கக்கூடிய கருதப்பட்ட உள்ளீட்டு வரவு எனில், கருதப்பட்ட உள்ளீட்டு வரவு முன் கொண்டு செல்லப்பட்டவாறு கூடு R3G இல் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்தப் பெறுமதியானது உடனடுத்துவரும் வரி விதிக்கத்தக்க

காலப்பகுதியின் ஆரம்ப இருப்பு மீதியாக இருக்கும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து வரும் வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் பெசேவ விபரத்திரட்டின் கூடு R3D இல் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(v) வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் பெசேவ சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அனுமதிக்கப்பட வேண்டிய உள்ளீட்டுப் பெ. சே. வ. அட்டவணை 05 இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

*4.* கருதப்பட்ட உள்ளீட்டு வரவினைக் கோருவது தொடர்பான மட்டுப்படுத்தல்கள்

(i) கீழே விடயம் (ii) இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கூடு R3B இலுள்ள கருதப்பட்ட உள்ளீட்டு வரவுக்கு சமமாக இருக்க வேண்டிய கூடு R3 இலுள்ள கருதப்பட்ட உள்ளீட்டு வரவு;

(ii) மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் தொடர்பாக கூடு R3 (R3B +R3F) இலுள்ள மொத்த கோரத்தக்க கருதப்பட்ட உள்ளீட்டு வரவானது, பின்வருவனவற்றிற்கு குறைவாக இருக்க வேண்டுமென மட்டுப்படுத்தப்படுகின்றது.

- கூடு 2 இலுள்ள வெளிப்படுத்தப்பட்ட வெளியீட்டு வரி, அல்லது

- தேறிய பெ. சே. வ. செலுத்தத்தக்கவையிலிருந்து கூடு R, R1 மற்றும் R2 (16 – R –R1 - R2) இலுள்ள கோரப்பட்ட வரவுகளைக் கழித்தல், அல்லது
- கூடு 2 இலுள்ள வெளிப்படுத்தப்பட்ட வெளியீட்டு வரியிலிருந்து அத்தகைய மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் (கூடு 2 - கூடு7) மீதான வரி விபரப்பட்டியல் தொடர்பில் கோரப்பட்ட உள்ளீட்டு வரியினைக் கழித்தல்

**குறிப்பு** : (அ) பெறுமதிசேர் வரி கோரப்படுகின்ற உள்ளீடு தொடர்பில் பொருட்களின் விற்பனை மீதான ஆகக்கூடிய சில்லறை விலையானது அதிகரிக்கப்படமாட்டாது.

(ஆ) சீரக்கல்கள், தேறிய கொள்வனவுச் செலவுகளை மாத்திரம் அறவீடு செய்வதன் மூலம் கோரப்பட்ட கருதப்பட்ட உள்ளீட்டின் மீதான வியாபாரக் கணக்குகளில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) பெ. சே. வ. உள்ளீட்டு கணக்கிணக்கக் கூற்று மற்றும் வியாபாரக் கணக்குகளில் சீராக்கப்பட்ட கொள்வனவுச் செலவு என்பன வருமான வரி விபரத்திரட்டுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இணைப்பு I

**அட்டவணை 05 - பதிவு செய்யப்படாத ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீதான கருதப்பட்ட பெறுமதி சேர் வரி வரவு**

**(அட்டவணை 05 - ஆணையாளர் நாயகத்திற்கு விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும்)**

| இல. | விலைப் பட்டியல் இல. | விலைப் பட்டியல் இல. | வழங்குனரின் தே.அ.அ. இல. | வழங்குனரின் வி.ப.சா. இல./ PSV இல. | வருமான வரி கோவை இல. ஏதேனு மிருப்பின் | வழங்குனரின் பெயர் | பெசேவரிக்குப் பொறுப்பாகக்கூடிய வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் செலவு (அ) ரூபா.) | பெசேவரிக்குப் பொறுப்பாகாத் தொடர் காலப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட கொள்வனவுச் செலவு (ஆ) (ரூபா) | கருதப்பட் டள்ளீட்டு வரவு = A x [வரி/ (1 + வரி வீதம்) | அனுமதிக்கத் தகாத கருதப் பட்ட உள்ளீட்டு வரவுத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |

இணைப்பு II

**பதிவு செய்தல் திகதியிலுள்ளவாறு ஆரம்ப இருப்புக்களின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு பெசேவ**

| தொடர் இல. | விலை விபரப்பட்டியல் திகதி | விலைப் விபரப்பட்டியல் இல. | பொருட்களின் விபரணம் | பதிவு செய்தல் திகதியில் விற்பனை செய்யப்படாதுள்ள அலகுகளின் VAT கொள்வனவுச் செலவு, பெசேவரிக்குப் பொறுப்புடைய (அ) [A of the format given in above மேலே பந்தி (1) (ii) இல. தரப்பட்டுள்ள வடிவத்தின் அ] (ரூபா) | பதிவுத் திகதியில் விற்பனை செய்யப் படாதுள்ள கொள் வனவுச் செலவு பெசேவரிக்குப் பொறுப்பாகாத (ஆ) ) (ரூபா) | கருதப்பட்ட உள்ளீட்டு பெசேவ =Ax [வரி வீதம்/(1+ வரி வீதம்)] |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |

இணைப்பு III

**வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கருதப்பட்ட உள்ளீட்டு பெ. சே. வ.**

| இல | விலைப் பட்டியல் திகதி | விலைப் பட்டியல் இல. | வழங்குன ரின் தே. அ. அ. இல. | வழங்குன வரி வி. ப. சா. இல/ PSV இல. Sup plier | வருமான வரி கோவை இல. ஏதே னும்மிருப் பின் | வழங்குன ரின் பெயர் | பொருட்களின் விபரணம் | அலகு விலை | அளவு | பெசேவரிக்குப் பொறுப்பாகக் கூடியவரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் மேற்கொள்ளப் பட்ட கொள்வனவு களின் செலவு (அ) (ரூபா) | பெசேவரிக்குப் பொறுப்பாகாத் தொடர் காலப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட கொள்வனவுச் செலவு (ஆ) ((ரூபா) | கருதப் பட்டஉள் ளீட்டு பெசே வ = **Ax** [வரி வீதம்) /(1+வரி வீதம்) | அனுமதிக் கத்தகாத கருதப்பட்ட உள்ளீட்டு பெசேவ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | |

4- 219

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.